முதல்வரிடம் மாவட்ட செயலாளர் வாழ்த்து

▶ பாராளுமன்ற தேர்தலில் திமுக மாவட்ட செயலாளர்கள் கூட்டணி கட்சி நிர்வாகிகள் இணைந்து சிறப்பாக பணியாற்றிய நிலையில், நேற்று சென்னையில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினை கோவை மாநகர் மாவட்ட திமுக செயலாளர் கார்த்திக் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

▶ முதல்வர் மு.க. ஸ்டாலினை கோவை தெற்கு மாவட்ட திமுக செயலாளர் தளபதி முருகேசன் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

▶ முதல்வர் மு.க. ஸ்டாலினை கோவை வடக்கு மாவட்ட திமுக செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

கோவை மாநகராட்சியில்

வாட்ஸ் அப் குழுவில் டெண்டர் ஒதுக்கீடு

லஞ்ச ஒழிப்பு போலீசார் விசாரணை

கோவை, ஏப்.25: கோவை மாநகராட்சியில் டெண்டர் ஒதுக்கீட்டில் விதிமுறை மீறப்பட்டிருப்பதாக புகார் வந்தது. கடந்த ஜனவரி மாதம் 14ம் தேதி 'சிசிஎம்சி டெண்டர் மெம்பர்ஸ்' என்ற பெயரில் புதிய வாட்ஸ் அப் குழு உருவாக்கப்பட்டிருந்தது. இந்த குழுவின் மூலமாக 192 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர்.

இக்குழுவில் டெண்டர் அறிவிப்புகள், விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தது. யார், யாருக்கு என்ன வேலைக்கான டெண்டர் வேணும், யார் எந்த வேலை எடுத்திருக்கிறார்கள், யார் அட்வான்ஸ் வேலை செய்தார்கள் என்ற விவரங்கள் வெளியிடப்பட்டிருந்தது. வார்டு வாரியாக ஒப்பந்ததாரர்கள் சிலர், தங்களுக்கு ரோடு வேலை தேவை, குடிநீர் பராமரிப்பு பணி தேவை என குழுவில் பதிவு செய்திருந்தார்கள்.

மாநகராட்சிக்கு டெண்டர் விடும் பணி, பொறுப்பு மாநகராட்சி நிர்வாகம் சார்ந்தது. எப்படி இதை வாட்ஸ் குழு ஆரம்பித்து 'சிண்டி கேட்' போட்டு முடிவு செய்யலாம், இதன் பின்னணியில் யார் இருக்கிறார்கள் என மாநகராட்சி நிர்வாகத்தினர் விசாரணை நடத்தினர். ஒப்பந்த பணிகளுக்கு கமிஷன் வாங்கி ஒதுக்கீடு செய்து தந்து வந்துள்ளதாகவும், இதன் பின்னணியில் சிலர் செயல்பட்டு வந்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

வார்டு, மண்டல அளவில் ஒப்பந்த பணிகள் குறிப்பிட்ட சிலருக்கு பிரித்து வழங்கப்பட்டிருப்பதாக தெரிகிறது. இந்த 'செட்டிங்' டெண்டர் விவகாரம் மாநகராட்சி வட்டாரத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்த விவகாரம் தொடர்பாக கோவை லஞ்ச ஒழிப்பு போலீசார் முதல் கட்ட விசாரணையை துவக்கியுள்ளனர். இதில் முறைகேடாக ஒப்பந்தம் எடுத்தவர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த நிலையில், மாநகராட்சி ஒப்பந்ததாரர்கள் நல சங்கத்தினர் செயலாளர் சந்திரபிரகாஷ் சங்க வாட்ஸ் அப் குழுவில் வெளியிட்ட ஆடியோ பதிவில், "மாநகராட்சியில் டெண்டர் தொடர்பாக வாட்ஸ் அப் குழு அமைத்து அதில் டெண்டர் ஒதுக்கீடு பெற்றதாக லஞ்ச ஒழிப்பு போலீசில் விசாரணை நடக்கிறது. இதில் வாட்ஸ் அப் குழுவில் இருந்தவர்கள் உடனடியாக லஞ்ச ஒழிப்பு போலீசில் ஆஜராக கடிதம் கொடுத்து விடுங்கள், எங்களுக்கும் டெண்டருக்கும் சம்பந்தம்மில்லை என சொல்லி விடுங்கள், இல்லாவிட்டால் குரூப்பில் இருந்த சங்க உறுப்பினர்கள் மீது சார்ஜ் சீட் போட வாய்ப்புள்ளது.

இந்த விவகாரம் தீவிரமாக போய் கொண்டிருக்கிறது. எனவே, முன்கூட்டியே ஆஜராகி விளக்கம் தருவது நல்லது. இல்லாவிட்டால் எப்ஐஆர் போட்டு விட்டால் சிக்கலாகி விடும், இதை அலட்சியமாக விட்டு விடாதீர்கள்" என தெரிவித்துள்ளார்.

தடுப்பணையில் மூழ்கி மாணவன் சாவு

பொள்ளாச்சி, ஏப்.25: ஈரோடு மாவட்டம் ரங்கம்பாளையத்தை சேர்ந்தவர் சிவக்குமார். இவரது மகன் கபிநாத் (21), கோவையில் உள்ள அரசு சட்டக் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு படித்து வந்தார். இவர் நேற்று அதே கல்லூரியில் படிக்கும் சக நண்பர்கள் ஆறு பேருடன் ஆழியாருக்கு பைக்கில் சுற்றுலா சென்று உள்ளார். ஆழியார் அணை பகுதியை பார்த்துவிட்டு, ஆழியாற்று தடுப்பணையில் நண்பர்களுடன் குளித்தனர். அப்போது கபிநாத், திடீரென தண்ணீரில் நீந்தியவாறு அக்கரைக்கு சென்றார். பின் சிறிது நேரத்தில் திரும்பி வந்தார். அப்போது ஆழமான பகுதியில் காபிநாத் சென்றுள்ளார். அப்போது திடீரென அவர் தண்ணீரில் மூழ்கி தத்தளித்தார். சிறிய நேரத்தில் உயிரிழந்தார்.

ரெட்பீல்டு சாலை சந்திப்பில்

போக்குவரத்து நெரிசலை தவிர்க்க 'மினி ரவுண்டானா'

கோவை, ஏப். 25: கோவை மாநகரில் உள்ள முக்கிய சாலைகளில் போக்குவரத்து நெரிசலை தவிர்க்க போக்குவரத்து போலீசார் 'யு டர்ன்' அல்லது 'ரவுண்டானா' வசதியை செயல்படுத்தி வருகிறார்கள்.

அதன்படி, கோவை புலியகுளம் விநாயகர் கோயில் அருகே புலியகுளம் சாலை, ரெட்பீல்டு சாலை சந்திப்பு உள்ளது. இந்த சாலை சந்திப்பில் காலை, மாலை நேரங்களில் அதிகமாக வாகனங்கள் சென்று வருகின்றன.

இதனால், அங்கு போக்குவரத்து நெரிசலை குறைக்க மாநகர போக்குவரத்து போலீஸ் சார்பில் தற்போது அங்கு மினி ரவுண்டானா அமைக்கப்பட்டு உள்ளது. இதுகுறித்து வாகன ஓட்டிகள் கூறுகையில், "கோவை மாநகரில் போக்குவரத்து நெரிசலை குறைக்க யூடர்ன் வசதி, ரவுண்டானா வசதி செய்யப்பட்டு உள்ளது.

அவ்வாறு தான் புலியகுளம் சாலையில் இருந்து ரெட்பீல்டு சாலை சந்திப்பில் சிறிய ரவுண்டானா அமைக்கப்பட்டு உள்ளது. இது வரவேற்கத்தக்கது" என்றனர்.

மாவட்ட முதன்மை கல்வி அதிகாரிக்கு ரூ. 20 ஆயிரம் அபராதம்

கோவை, ஏப்.25: கோவை சூலூரை சேர்ந்தவர் ஓய்வு பெற்ற ஆசிரியர் பாலசுந்தரம் (74). இவர் தான் பணிபுரிந்த காலத்தில் தனக்கு ஊதிய ஊக்கத் தொகை வழங்கப்படவில்லை என்று மாவட்ட முதன்மை கல்வி அதிகாரி மீது கோவை நிரந்தர மக்கள் நீதிமன்றத்தில் ஒரு மனு கொடுத்திருந்தார். இந்த மனுவின் மீது ஆஜராகி விளக்கம் அளிக்கும்படி மாவட்ட முதன்மை கல்வி அதிகாரிக்கு நிரந்தர மக்கள் நீதிமன்றம் இருமுறை சம்மன் அனுப்பியது. ஆனால் கல்வி அதிகாரி ஆஜராகவில்லை. இதையடுத்து மாவட்ட முதன்மை கல்வி அதிகாரிக்கு ரூ.20 ஆயிரம் அபராதம் விதித்து நிரந்த மக்கள் நீதிமன்ற நீதிபதி நாராயணன் உத்தரவிட்டார். மேலும் இந்த தொகையை அவர் 2 வார காலத்திற்குள் சென்னை உயர் நீதி மன்ற தலைமை நீதிபதியின் நிவராண நிதிக்கு செலுத்த வேண்டும் என்று உத்தரவிட்டார்.

மாண்புமிகு சிறப்பு குடும்ப வன்முறை தடுப்பு நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கோயம்புத்தூர்
CMP NO: 53895 OF 2023
IN
DVA NO: 30 OF 2022

டெர்மீனா
க/பெ.V.அற்புதராஜ்
மனுதாரர் / மனுதாரர்
–எதிர்–
1.V.அற்புதராஜ்
த/பெ.விஸ்வாசம்
எண். RA46/NA.ஏர்போர்ஸ் நாவல், பழைய ஓம் பராசக்தி மில், கணபதி, கோயமுத்தூர் – 641 006
2.ஜோசெஃப் மேரி
க/பெ.விஸ்வாசம்
சோமசுந்தரம் மில் அருகில், காட்டூர், ராம் நகர்,
கோயமுத்தூர் – 641009
எதிர்மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள்

பொது அறிவிப்பு

மாண்புமிகு கோயம்புத்தூர் சிறப்பு குடும்ப வன்முறை தடுப்பு நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் குடும்ப வன்முறைக்கெதிராக பாதுகாப்பு கேட்டும் இழப்பீடு மற்றும் இன்ன பிற பரிகாரம் கேட்டும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அது ஒருதலை பட்சமாக தீர்ப்பாகிவிட்டது. அந்த தீர்ப்பினை நடைமுறைபடுத்த கோரி மேற்படி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார். அந்த மனு நிலுவையில் இருந்து வருகிறது. மேலும் அந்த வழக்கு வருகின்ற 26.04.2024 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. ஆகவே, வருகின்ற 26.04.2024 ஆம் தேதியன்று தாங்கள் இருவரும் நேரடியாகவோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ மேற்படி நீதிமன்றத்தில் காலை 10.00 மணிக்கு ஆஜராகி தங்களின் பதிலை அளிக்க வேண்டுமெனவும் இல்லையென்றால் வழக்கானது தங்களுக்கெதிராக ஒருதலைபட்ச தீர்ப்பாகிவிடும் என்பதை இதன் மூலம் அறியவும்.

K.சர்ச்சில்.B.A.,B.L.,
மனுதாரர் வழக்கறிஞர்
Cell : 9943656565

அரசுப் பள்ளியில் முதலாம் வகுப்பில் 20 மாணவர்கள் சேர்ந்தனர்

அன்னூர், ஏப்.25: கரியாம்பாளையம் ஊராட்சி - எல்லப்பாளையத்தில் 1951 முதல் செயல் பட்டு வந்த அரசு துவக்கப்பள்ளி 1984-ல் நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டது. இப்பள்ளியில் முதலாம் வகுப்பிற்கான மாணவர் சேர்க்கை துவங்கியது. இதில் தற்போது 20 மாணவர்கள் முன்கூட்டியே சேர்ந்துள்ளனர்.

தலைமை ஆசிரியர் பவளக்கொடி கூறுகையில் \"அன்னூர் வட்டாரத்திலேயே அதிகபட்சமாக இந்த பள்ளியில் தான் 226 பேர் படிக்கின்றனர்.

இப்பள்ளியில் இருந்து 3 கி.மீ தொலைவில் உள்ள மாணவ மாணவியருக்கு இலவசமாக வேன் இயக்கப்படுகிறது. இப்பள்ளி வானவில் மன்றம் சார்பில் ஒரு மாணவர் மாநில அளவில் வெற்றி பெற்று வெளிநாட்டிற்கு பயணம் சென்றது குறிப்பிடத்தக்கது. இப்பள்ளியில் 30 கணினிகள் உள்ளன. வருகிற ஜூன் மாதம் முதல் ஹைடெக் லேப் செயல்பட உள்ளது. தொடர்ந்து மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது \" என்று கூறினார்.

நீதிமன்றத்தில் ஆஜரான திமுகவினர்

▶ கோவை குனியமுத்தூரில் கடந்த அதிமுக ஆட்சியின் நிர்வாக சீர்கேட்டை கண்டித்து நடந்த ஆர்ப்பாட்டத்தின் போது போடப்பட்ட வழக்கு விசாரணைக்காக நீதிமன்றத்தில் ஆஜரான திமுக பொதுக்குழு உறுப்பினர் குறிச்சி பிரபாகரன், பகுதி செயலாளர் லோகு, கூடலூர் நகராட்சி தலைவர் அறிவரசு, மதியழகன், வீரபாண்டி கார்த்தி, மார்க்சிஸ்ட் நிர்வாகி நாகேந்திரன், விசிக முகம்மது அலி உள்ளிட்டோர். அருகில் வழக்கறிஞரணி அமைப்பாளர் அன்புச்செழியன்.

கவுண்டம்பாளையம், வீரகேரளம், வடவள்ளி பகுதிகளில்

இன்று, நாளை குடிநீர் விநியோகம் இருக்காது

கோவை, ஏப்,25: தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (பில்லூர்) நிர்வாக பொறியாளர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்படும் கூட்டுக்குடிநீர் திட்டத்தில் வெள்ளக்கிணறு, பெரியநாயக்கன்பாளையம், பெரியமத்தம்பாளையம் மற்றும் நரசிம்ம நாயக்கன்பாளையம் ஆகிய இடங்களில் 600 மி.மீ விட்டமுள்ள சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் குழாயில் பராமரிப்பு பணிகள் இன்றும், நாளையும் நடைபெற உள்ளது. எனவே இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் கோவை மாநகராட்சி கவுண்டம்பாளையம், வீரகேரளம், வடவள்ளி பகுதியில் இன்றும், நாளையும் குடிநீர் விநியோகம் இருக்காது. பராமரிப்பு பணிகள் முடிந்து நாளை மறுநாள் (27ம் தேதி) காலை முதல் குடிநீர் விநியோகம் பயன்பாட்டுக்கு வரும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

ADITYA BIRLA CAPITAL — PROTECTING INVESTING FINANCING ADVISING

ஆதித்ய பிர்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்– இந்தியன் ரேயான் காம்பவுண்டு, வேராவல், குஜராத்–362266
கிளை அலுவலகம்: 2வது தளம், கட்டடம் எண்.739, நிசான் ஷோரூம் மாடியில், அவினாசி சாலை, கோயம்புத்தூர்–641018

பிற்சேர்க்கை IV [கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(1) காணவும்]
சுவாதீன அறிவிப்பு (அசையாச் சொத்துக்காக)

இவ்வாறிருக்க கீழே கையொப்பமிட்டவர் **ஆதித்ய பிர்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின்** அதிகாரப்பூர்வ அதிகாரியாக இருக்கிறபடியால் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (2002 இன் 54) கீழ் மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 3 உடன் பிரிவு 13(12) கீழ் தமக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி கடன்தாரர்கள் மேற்கூறிய அறிவிப்பு கிடைக்கப் பெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் **திருப்பிச் செலுத்தக் கோரி அழைப்பு விடுத்திருந்தார்.**

கடன்தாரர்கள் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியுள்ளனர். இதன்மூலம் கடன்தாரர்கள் மற்றும் பொதுவாகப் பொதுமக்களுக்கு வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே கையொப்பமிட்டவர் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8 உடன் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13 (4) இன் கீழ் அவருக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி இங்கே கீழே விவரிக்கப்பட்ட சொத்தினை சுவாதீனம் செய்துள்ளார்.

கடன்தாரர்களுக்குக் குறிப்பாகவும் மேலும் பொதுமக்களுக்குப் பொதுவாகவும் இதன்மூலம் எச்சரிக்கப்படுவதாவது: சொத்துடன் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ள வேண்டாம் என்றும் மேலும் சொத்துடனான அனைத்து நடவடிக்கைகளும் மற்றும் அதற்கான வட்டி ஆகிய **தொகைக்காக ஆதித்ய பிர்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின்** வசூலுக்கு உட்படும். கடனீட்டுச் சொத்துகளை மீட்பதற்கு, கால அவகாசம் கிடைக்கப் பெறுதல் குறித்த, சட்டத்தின் பிரிவு 13 இன் உட்–பிரிவு 8 விதிமுறைகள் கடன்தாரர்கள் கவனத்திற்கு கொண்டுவரப் படுகின்றன.

1. கடன்தாரர் பெயர்: R. பாபு, ரத்தின குமாரி பாபு
நிலுவைத் தொகை: ரூ.10,92,209.05/– (ரூபாய் பத்து இலட்சத்து தொன்னூற்று இரண்டாயிரத்து இருநூற்று ஒன்பது மற்றும் பைசா ஐந்து மட்டும்)
கோரிக்கை அறிவிப்பு தேதி: 16.02.2024 **சுவாதீனம் நாள்: 23.04.2024**

அசையா சொத்துகளின் விவரம்

மனை எண்.25–ஐ கொண்ட சொத்தின் அனைத்து துண்டுகளும் பகுதிகளும் 1092 ச.அடி பரப்பில் கென்னடி தென்றல் அவென்யூ S.F. எண். 371, மனை எண்.25, எண்.2, கூடலூர் கிராமம், டவுன் பஞ்சாயத்து, கோயம்புத்தூர் தாலுகா & மாவட்டம், தமிழ்நாடு–641020 இடத்தில் அமைந்துள்ளது. **எல்லைகள்: வடக்கு: மனை எண்.24, கிழக்கு:** 23 **அடி சாலை, மேற்கு: மனை எண்.46, தெற்கு: மனை எண்.26.**

2. கடன்தாரர் பெயர்: திரு. ராஜேஷ் பாலகிருஷ்ணன், திருமதி. அருண் குமார் பாலகிருஷ்ணன்
நிலுவைத் தொகை: ரூ. 22,17,145.64/– (ரூபாய் இருபத்து இரண்டு இலட்சத்து பதினேழாயிரத்து நூற்று நாற்பத்து ஐந்து மற்றும் பைசா அறுபத்து நான்கு மட்டும்)
கோரிக்கை அறிவிப்பு தேதி: 14.02.2024 **சுவாதீனம் நாள்: 23.04.2024**

அசையா சொத்துகளின் விவரம்

சொத்தின் அனைத்து துண்டுகளும் பகுதிகளும் Sf எண். 269/2, பிளாக் எண். 25, T.S. எண். 27, வார்டு எண்.31, வார்டு எண். 64, கதவு எண். 17 இல் 1593 ச.அடி பரப்பிலானதும், கக்கன் நகர் 2வது தெரு, உப்பிலிபாளையம் கிராமம், இஎஸ்ஐ மருத்துவமனை, சிங்காநல்லூர் சார் பதிவு அலுவலகம், சிங்காநல்லூர் சார் பதிவு அலுவலகம், கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா–641005 இடத்தில் அமைந்துள்ளது. **எல்லைகள்: வடக்கு:** T.S.எண். 10, **கிழக்கு:** T.S. எண்.22 கௌரி என்பவருக்கு சொந்தமான சொத்து, **மேற்கு:** T.S.எண். 30, 28 & T.S.எண். 29 பொன்னம்மாளுக்கு சொந்தமான சொத்து, **தெற்கு:** T.S.எண். 28 & T.S.எண். 26 மதன்குமாருக்கு சொந்தமான சொத்து.

நாள்: 23.04.2024 அதிகாரப்பூர்வ அதிகாரி
இடம்: கோயம்புத்தூர் ஆதித்ய பிர்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

காருண்யா பல்கலைக்கழகத்தில் சர்வதேச மாநாடு

கோவை, ஏப்.25: காருண்யா பல்கலைகழகத்தில் எலக்ட்ரானிக்ஸ் அண்ட் கம்யூனிகேஷன் இன்ஜினியரிங் பிரிவு சாதனங்கள், சர்க்யூட்கள் மற்றும் சிஸ்டம்ஸ் பற்றிய 7வது IEEE சர்வதேச மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில், 130 ஆவணங்கள் ஏற்றுகொள்ளப்பட்டன. 64 விளக்க காட்சிக்காக பதிவு செய்யப்பட்ட 1,098 காகித சமர்ப்பிப்புகளை பெற்றன. நிகழ்ச்சியில், பங்களாதேசில் உள்ள கிழக்கு மேற்கு பல்கலைக்கழகத்தின் மின் மற்றும் மின்னணு பொறியியல்துறை தலைவர் டாக்டர் அனிசுல் ஹக், இந்தியாவின் IEEE மெட்ராஸ் பிரிவின் தலைவர் டாக்டர் பொற்குமரன், அமெரிக்க தொழில் நுட்ப பணியாளர்களின் உறுப்பினர் டாக்டர் முஸ்தபா சிலாமனி, விஞ்ஞானி டாக்டர் சுபாஷ் சந்தர், சவூதி அரேபியாவின் கிங் அப்துல்லா, கட்டிட கலைஞர் வில்சன் பிரதீப் ஆகியோர் கலந்து கொண்டு தங்களது துறை பற்றி விவாதித்தனர்.

விஜிஎம் மருத்துவமனையில்

அறுவை சிகிச்சை இல்லாமல் தொப்பையை குறைக்க முடியும்

கோவை, ஏப்.25: விஜிஎம் மருத்துவமனையின் எலும்பியல் மருத்துவர், டாக்டர் சுமன், இரைப்பை குடல் மருத்துவர், டாக்டர் மதுரா ஆகியோர் கூறியதாவது: உடல்பருமன் நமது மக்கள் தொகையில் மூவரில் ஒருவரை பாதிக்கிறது, மற்றும் இது பெரும்பாலும் இளம்பருவத்தினரிடையே தற்போது அதிகமாக உள்ளது. மேலும், இது பலநோய்களை உண்டாக்கும் அபாயத்தை அதிகரிக்கிறது. உடல் பருமன் பி.எம்.ஐ மூலம் கணக்கிடப்படுகிறது. எடைதாங்கும் மூட்டுகள், முதன்மையாக முழங்கால், இடுப்பு மற்றும் கணுக்கால் ஆகியவற்றில் கீல் வாதத்தை உண்டாக்குவதற்கான முக்கிய ஆபத்து காரணியாக உடல்பருமன் உள்ளது. தசை என்பது நல்ல சதை தன்மையாக இருக்க வேண்டும். ஆனால், ஒபிசிட்டி காரணமாக தசை செயலிழந்து, சதை நடுவில் கொழுப்பு பதிந்து புண் ஆகலாம் அல்லது தசை கிழிந்துவிடலாம். உதாரணமாக, தோள்பட்டையில் ரொட்டேட்டர் கஃப் தசைகள் கிழியலாம். மேலும், காலில் பிளாண்டார்ஃபேஸ்சிடிஸ், அகில்லெஸ்தசைநார் அழற்சி, தட்டையானகால் மற்றும் பின்புறதி பியல் தசைநார் செயலிழப்பு ஆகியவை பருமனான மக்களில் மிகவும் பொதுவானவை. உடல்பருமன் ஆஸ்டியோ போரோசிஸையும் ஏற்படுத்தலாம். இதில் எலும்புகளின் வலிமையைக் குறைந்து, எளிதில் எலும்பு முறிவு ஏற்படுத்துகிறது.

வெறும் தண்ணீரில் வழுக்கி அல்லது படிக்கட்டில் கடைசி படியில் தடுக்கி விழுந்து பெரிய அளவில் எலும்பு முறிவு ஏற்படுவதற்கு இந்த ஆஸ்டியோ போரோசிஸ்தான் காரணம் குறைவான நடைபயிற்சி, ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் உடற்பயிற்சியின்மை ஆகியவை இந்த பிரச்னையை ஏற்படுத்தும். எலும்பியல் மருத்துவத்தில் உடல் பருமனுக்கு ஒருங்கிணைந்த அணுகுமுறை தேவைப்படுகிறது. உடல்பருமனை சரிசெய்ய ஒருசிறப்பு மருத்துவக்குழு தேவை. இந்த குழுவில் ஒரு இரைப்பை குடல் மருத்துவர், எலும்பியல் அறுவை சிகிச்சை வல்லுநர், ஊட்டச்சத்து நிபுணர், தேவைப்பட்டால் உட்சுரப்பியல் நிபுணர் இயன்முறை மருத்துவர் தேவை. \"குறைவாக சாப்பிடுவது மட்டுமல்ல, அது எப்போதும் நாம் உட்கொள்ளும் உணவின் தரத்தைப் பற்றியது. எண்டோஸ் கோபிக் பலூனிங், தையல் சிகிச்சையில் நீங்கள் எவ்வளவு சாப்பிடலாம் என்பதைக் கட்டுப்படுத்தவும், நீங்கள் விரைவாக திருப்தி அடையச் செய்யவும் வயிற்றில் பலூன் பேண்ட் வைக்கப்படுகிறது. இந்த முறை பேரியாட்ரிக் அறுவை சிகிச்சை போலல்லாமல் இலக்கை அடையும் போது, வயிற்றின் அளவை இயல்பு நிலைக்கு மாற்றி, நோயாளி சாதாரண ஆரோக்கியமான உணவை அனுபவிக்க முடியும். மேலும், எழும்பு, மூட்டு, தசை பிரச்னைகளை எங்கள் உதவியுடன் சரி செய்ய முடியும். இவ்வாறு இருவரும் கூறினர்.

▶ டாக்டர் சுமன்

▶ டாக்டர் மதுரா

ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட்
CIN: U67100TZ2014PTC020363
கார்ப்பரேட் அலுவலகம்: கோஹினூர் ஸ்கொயர், 47வது தளம், N.C. கேல்கர்மார்க் R.G.கட்காரி சவுக், தாதர் (மேற்கு), மும்பை–400 028.
மின்னஞ்சல்: karthi.govindasamy@omkaraarc.com | தொலைபேசி: 044–24323033
அதிகாரபூர்வ அதிகாரி கைபேசி எண். +91 9344684194/ +91 9864062068

[பிற்சேர்க்கை–IV–A]
[விதி 8(6) r/w 9(1) விதிகளை காணவும்]
அசையா சொத்து விற்பனைக்கான மின்–ஏலம் பொது அறிவிப்பு

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) r/w 9(1) விதிகளுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (``சர்பாசி சட்டம்``) கீழ் அசையும்/ அசையா சொத்துகள் விற்பனைக்கான மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு

இதன்மூலம் பொதுவாக பொதுமக்களுக்கும் இதன்கீழ் பெயரிடப்பட்ட கீழ்க்குறிப்பிட்ட கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பிட்டும் வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே விவரிக்கப்பட்ட அசையா சொத்துகள் கடனீட்டு கடனீந்தோருக்கு அடமானம் / உரிமை அளிக்கப்பட்டது, அது ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பி. லிட், (OARPL), மேலும் கீழே உள்ள கணக்குகளின் முழு நிலுவையில் உள்ள கடன்களையும் ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பி. லிட் (OARPL) (ஓம்காரா PS 22/2020–21 ஒப்பந்தங்கள் மூலம் பொறுப்பாட்சியின் பொறுப்பாளராக அதன் திறனில் செயல்படும்)

உடமைப் பத்திர ஒப்பந்த தேதி 26.02.2021 யிலிருந்து ஃபுல்லர்டோன் இந்தியா ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட் (உரிமைப்பட்ட நிறுவனம்) இன்படி OARPL இன் அதிகாரப்பூர்வ அதிகாரியால் **சுவாதீனம்** செய்யப்பட்டுள்ளது. அதற்கிணங்க, OARPL ஆனது நிலுவைகளை வசூலிக்க மேலும் கடனீடுகளை அமலாக்கம் செய்ய உரிமை பெற்றுள்ளது பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டத்தின் பிரிவுகள் 13(2) மற்றும் (4) சர்பாசி விதிகளின் கீழ் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி; கீழ்க்காணும் சொத்தை சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து கடனீட்டு கடனீந்தோராக OARPL நிலுவையில் கீழ்க்காணும் சம்பந்தப்பட்ட நிரலில் காணும் தொகையை மீட்பதற்காக, **"உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு" மேலும் "உள்ளது எதுவோ அது" மற்றும் "உதவிசாரா அடிப்படையில்"** விற்பனை செய்யவுள்ளது. பிரிவு 13(2) இன் கீழ் அனுப்பப்பட்ட கோரிக்கை அறிவிப்பின்படி சம்பந்தப்பட்ட கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/ அடமானதாரர்கள் விவரம், கடனீட்டு கடனீந்தோர், உரிமையாளர், நிலுவைத் தொகை, சொத்தின் சுவாதீன தேதி, நிர்ணய விலை, ஏலம் உயர்த்தும் தொகை, முன்வைப்புத்தொகை, நாள் மற்றும் நேரம் ஆகியவை கீழே சம்பந்தப்பட்ட நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/ அடமானதாரர்களின் பெயர்	**திருமதி. A கமலா க/பெ: திரு.அனில் குமார் பிஷோனி (கடன்தாரர்/அடகுதாரர்) மற்றும் திரு. அனில் குமார் பிஷோனி (உ–கடன்தாரர்)**

கடனீட்டு சொத்து விவரம்: கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், வடவள்ளி சார் பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் தாலுகா, கவுண்டம்பாளையம் கிராமம், S.F. எண். 312/2B இன்படி சென்னை நகர்ப்புற திட்ட இயக்குநர் வழங்கிய அனுமதி எண்.LP/D.T.C.P. எண். 633/96 இன்படி, வீட்டு லே அவுட்டானது "ஷாஜி லிபர்டி கார்டன்" என்ற பெயரில் மாற்றப்பட்டுள்ளது. இதில் மனை எண்.111 இன் எல்லைகள் மற்றும் அளவீடு பின்வருமாறு: எல்லைகள்: வடக்கில் கிழக்கு மேற்காக 23 அடி லே அவுட் சாலை, தெற்கில் மனை எண்.106, கிழக்கில் மனை எண்.112, மேற்கில் மனை எண்.110. இதற்கு மத்தியில் கிழக்கு–மேற்காக வடக்கு பக்கம்–40 அடி, கிழக்கு–மேற்காக தெற்கு பக்கம்–40 அடி, தெற்கு–வடக்காக கிழக்கு பக்கம்–50 அடி, தெற்கு–வடக்காக மேற்கு பக்கம்–50 அடி என 2000 சதுடி அல்லது 4 சென்ட் 258 ச.அடி அல்லது 185.80 ச.மீ கட்டடத்துடன் கூடிய காலி நிலமானது கவுண்டம்பாளையம் மூன்றாம் நிலை நகராட்சி அனுமதியின்படி தரை மற்றும் முதல் தளம் கட்டப்பட்டு 868 ச.அடி பரப்பில் கட்டப்பட்ட ஆர்சிசி கூரைவேயப்பட்ட கட்டடமானது தரை மற்றும் முதல் தளத்தில் 129 ச.அடி போர்டிகோ பகுதியானது அனைத்து பொருத்துதல் மற்றும் இணைப்புகள் ஆகியவற்றுடன் லே அவுட் சாலைகள் மற்றும் அனைத்து பொது நடைபாதைகளை பயன்படுத்தும் உரிமைகளுடன் அமைந்துள்ளது. இதற்கான மின் சேவை இணைப்பு எண்.101–006–641. இந்த சொத்து கவுண்டம்பாளையம் நகராட்சியில் தற்போது கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைகளின் கீழ் அமைந்துள்ளது.

சொத்தின் உரிமையாளர்:	திருமதி. A கமலா க/பெ: அனில் குமார் பிஷோனி
கோரிக்கை அறிவிப்பு நாள்:	01